# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 35 / 2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 1 |
| Name | : முத்து. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.11.2023.

- - - - - - -

2,3,4 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 5 எதிரிகள் ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் உத்தப்புரத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். என்னுடைய தாத்தாவிற்கு 2 மனைவிகள். எனது கணவரின் தகப்பனார் ஆஜர் எதிரி முனியாண்டி ஆவார். என் கணவருக்கும், ஆஜர் எதிரி முனியாண்டிக்கும் சொத்துப் பிரச்சனை இருந்து வந்தது. மற்ற எதிரிகள் அவருக்கு ஆதரவாக இருந்து வந்தனர். கடந்த 2014 ஆம் வருடம் தேதி மற்றும் மாதம் ஞாபகமில்லை. காலை 11 மணிக்கு என் கணவரை எதிரி காசிராஜா அரிவாளால் இடது கையை வெட்டினார்.

சின்னக்கருப்பன், முனியாண்டி, தொப்புளன், கோமாளி ஆகியோர்கள் உடனிருந்து என் வீட்டுக்காரர் கொட்டம் போட்டுக்கொண்டிருந்தபோது, அரிவாளால் தாக்கினார்கள். வெட்டியவுடன் என் கணவரின் கை தனியாக விழுந்துவிட்டது. பின்னர், உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்குச் சேர்த்து, பின்னர் காயம் அதிகமாக இருக்கவே, மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் என் கணவரை சிகிச்சைக்காக சேர்ந்தேன். நானும், என் அப்பாவும் உடன் சென்றோம். காவல் துறையினர் மதுரை அரசு ராசாசி மருத்துமனையில் வைத்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்தப் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் மரக் கைபிடியுடன் கூடிய நீண்ட அரிவாள் எதிரி காசிராஜா வெட்டப்பயன்படுத்தியது. அது சா.பொ.1 ஆகும். என்னிடம் காட்டடப்படும் மற்றொரு அரிவாள் என் மூத்த மாமா பாண்டி கையில் வைத்திருந்தார். (மேற்படி அரிவாள் எதிரிகளுக்கு தொடர்ப்பில்லை என்பதால் குறியீடு செய்யப்படவில்லை). என்னிடம் காட்டப்படும் மஞ்சள் கலர் பனியன் என்வருடையதுதான். அது சா.பொ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை -</u>

சம்பவ நேரத்தில் நான் உத்தரப்புரத்தில் இருந்தேன். என் தாயார் பாண்டியம்மாள் என் கணவருடன் பிறந்தவர் என்றால் சரிதான். என் தாத்தா முனியாண்டிக்கு 2 தாரம் என்றால் சரிதான். முதலாவது என் தாயார் கிருஷ்ணம்மாள், 2வது சுப்புலெட்சுமி என்றால் சரிதான். இளைய தாரத்திற்கு காசி என்ற காசிராஜன் மகன் என்றால் சரிதான். என் கணவருக்கும், என் தாத்தா முனியாண்டிக்கும் பூர்வீகச் சொத்து

சம்பந்தமாக அடிக்கடி பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான். பூர்வீகச் சொத்தின் ஒருபகுதியை என் தாயாருக்கு என் தந்தை தானசெட்டிமெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சொத்தில் என் தாத்தா முனியாண்டியும், இந்த வழக்கின் 1 வது காசி என்ற காசிராஜன் அந்த பூர்வீகச் சொத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த சொத்து பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் மைத்துனன் பாண்டி அம்மச்சியாபுரத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். நானும் என் கணவரும், தாயாரும் பேரையம்பட்டியில் குடியிருந்தோம் என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில்நான் உத்தப்புரத்தில்தான் இருந்தேன். நான் உத்தப்புரத்தில் இருந்தபோது சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். கேள்விப்பட்டபிறகுதான் நான்போனேன். நான் போகும்போது என் கணவர் மயக்கநிலையில் இருந்தார் என்றால் சரிதான். அப்போது என் கணவர், பாண்டி, கருப்பையா, முனியாண்டி ஆகியோகர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. எல்லோரும் இருந்தார்கள். சம்பவத்தின்போது யார் யார் எவ்வாறு தாக்கிக் கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். என் கணவர் வாய்பேச முடியாத நிலையில் இருந்ததால்நான் மருத்துவமனையிலிருந்து நான் போலிசிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சொல்லச் சொல்ல புகார் வாக்கு்மூலம் போலிசார் எழுதினார்கள். அது முடிந்தவுடன் நான் கையெழுத்துப் போட்டேன். எதிரி காசிராஜனுக்கு சம்பவ சமயத்தில் பாண்டி, கருப்பையா தாக்கியது சம்பந்தமாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. காசிராஜனும், அவரது அப்பா முனியாண்டியும் கொட்டம்போட ஏற்பாடு செய்துகொண்டிருந்ததாகவும்,

அந்த சமயத்தில் பாகம் பிரிக்காமல் நீங்கள் எப்படி கொட்டம் போடலாம் என்று என் கணவரும், மைத்துனர் பாண்டியும் அரிவாளுடன் வந்து எதிரிகளை வெட்டிக் காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அப்போது பாண்டி என்பவரின் கையில் அரிவாளால் என் கணவரின் மீது பட்டு காயம் ஏற்பட்டுது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் / திரு. P.S. ரஸ்கின் ராஜ், 30.11.23.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.